
# பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள்

## அல்லது

# காத்தான்குடியில் ‘கலம்’ பிடித்த எழுத்தாளர்கள்



மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)

ஷைனி பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள்

அல்லது

## காத்தான்குடியில் 'கலம்' பிடித்த எழுத்தாளர்கள்

**மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)**

**ஸைனி பதிப்பகம்**
23/6, வத்தல்பொல வீதி,
ஹேணமுல்லை,
பாணந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள்
அல்லது
காத்தான்குடியில் 'கலம்' பிடித்த எழுத்தாளர்கள்"
(கையடக்க ஆவண நூல்)

ஆசிரியர் : மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)

ஸைனி பதிப்பக வெளியீடு - 2010.11.01

பதிப்புரிமை : நூலாசிரியருக்கே.

இலவச விநியோகம்.

# சமர்ப்பணம்

நூற்றாண்டை
நுகரும்
என்
ஆரம்பப் பாடசாலை
காத்தான்குடி
அல்ஹிரா
வித்தியாலயத்துக்கு
இந்நூல்
சமர்ப்பணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

بسم الله الرحمن الرحيم

*காத்தான்குடி, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் – மட்டக்களப்பு மாவட்டத்தில் – அமைந்த மாபெரும் நகரம். இங்கு எழுத்தாளர்கள் ஏராளம். அவர்களின் பணியும் தாராளம். எனது சின்ன வயது முதலே எழுதுபவர்களுடன் நல்ல தொடர்பு. நல்ல பல இலக்கியப் பணிகளை எமதூரில் செய்த கழகம், 'நவ இலக்கிய மன்றம்'. இன்று அதற்கு வயது ஐம்பது. எனது இலக்கிய வளர்ச்சிக்கும் அதன் உறுப்பினர்கள் தொண்டாற்றினார்கள் என்றால் அது மிகையாகாது. வாழ்க நவ இலக்கிய மன்றம்!*

*என்னை வளர்த்த இலக்கியக் கழகத்துள் 'பாவலர் பண்ணை'யும் ஒன்று. எனது இலக்கிய ஆசான்களாக நவ இலக்கிய மன்றக் கவிஞர் அல்ஹாஜ் மௌலவி எம். எச். எம். புஹாரி, அல்ஹாஜ் சாந்தி முகைதீன், எனது ஆரம்ப ஆசான் எம். எம். மஹ்ரூப் கரீம், எனது தமிழாசான் மர்ஹூம் ஜே. எம். அப்துல் காதர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.*

*எமதூர் எழுத்தாளர்களை அறிமுகம் செய்ய நான் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டேன். அதன் முதற்பகுதியாக பூவி. ரஹ்மத்துல்லா அவர்களின் 'வார உரைகள்' பத்திரிகையில் 20.10.2006 முதல் 'காத்தான்குடியில் கலம் பிடித்த எழுத்தாளர்கள்' என்ற தலைப்பில் எழுதினேன். சில பல நெருக்கடிகளால் அது முற்றுப் பெறவில்லை. அந்த சேகரங்களை இன்று 'பேனாவில் பெருக்கெடுத்த பெரியவர்கள் அல்லது காத்தான்குடியில் கலம் பிடித்த எழுத்தாளர்கள்' என்ற மகுடத்தில் நூல் வடிவில் தந்துள்ளேன் – அதுவும் இலவசமாக. பாருங்கள்; பயன் பெறுங்கள்; பிரார்த்தியுங்கள்! இந்நூலுக்கு பல்வேறு உதவிகளைச் செய்த என் மனைவி ஹாஜியானி ரிபாயா அவர்களுக்கும் பின்னட்டை அறிமுகத்தைச் செய்த எனதன்பு மகன் அல்ஹாஜ் எம். எப். எம். ஷைனி அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டுத் தந்த VYU அச்சக உரிமையாளரும் பன்னூலாசிரியருமாகிய கதைவாணன் மொஹிடீன் ரஜா அவர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.*

*நன்றி.*

இவ்வண்ணம்,

23/6, வத்தல்பொல வீதி, — **பன்னூலாசிரியர்**

ஹேணமுல்லை, பாணந்துறை. — **மௌலவி. காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)**



# பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள்

***அல்லது***

# காத்தான்குடியில் 'கலம்' பிடித்த எழுத்தாளர்கள்

இலங்கையில் பிரபலம் பெற்ற நகரம் காத்தான்குடி. இங்கு முஸ்லிம்கள் மிகவும் பரந்து வாழ்கின்றார்கள். இவ்வூரில் நிறைய கல்விமான்கள் வாழ்ந்தார்கள்; வாழ்கின்றார்கள்.

இந்த ஊரில் பொது நோக்குடையவர்கள் மிகக் கூடுதலாக வாழ்கின்றார்கள். அறிஞர்கள், ஆலிம்கள், ஹாபிழ்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், இலிகிதர்கள் என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த ஊரின் முன்னேற்றத்திற்கு இங்கு வாழ்ந்த, வாழ்கிற எழுத்தாளர்கள் ஒரு காரணமாகத் திகழ்கின்றார்கள். அந்த வகையில் ஆற்றல் படைத்த ஆலிம்கள் அரபு இலக்கியத் துறையில் ஆற்றிய பணிகளையும், தமிழ் மொழியில் அறிஞர்கள், கவிஞர்கள் ஆற்றிய பணிகளையும் பட்டியல் இட்டுக் காட்டுவது நல்லதென நான் நினைத்தேன்.

அந்த வகையில் பல்வேறு தகவல்களை மையமாக வைத்து இந்தத் தொகுப்பை எழுதியுள்ளேன். படியுங்கள்! சிந்தியுங்கள்! தகவல்களைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்!

## காத்தான்குடியில் 'கலம்' பிடித்த அரபு மொழி எழுத்தாளர்கள்!

1. மர்ஹூம் இப்றாஹீம் ஆலிம் ஸாஹிப் - காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியை பிறப்பிடமாகக் கொண்டு அரபியிலும், அரபுத் தமிழிலும் அர்த்தமான பல நூல்களை யாத்துள்ளார்.

2. காத்தான்குடி 2 ஆம் குறிச்சியில் மிகப் பெயர் போன முப்தி அல்ஆலிமுல் பாழில் அஹ்மத் லெப்பை ஆலிம் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். "ஓடக்கரை ஆலிம்" என்று அழைக்கப்படும் அன்னார், அரபியில் பல மௌலித்களை எழுதினார். "அல்மின்ஹதுஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமதானியா பீதரீஅதிஸ் ஸாதாதிஸ் ஸைலானிய்யா"
எனும் நூல் பிரபலமானது.

3. காத்தான்குடி 4 ஆம் குறிச்சியில் பெயர் போன (உம்பம்பியர் மகன்) அல்லாமா முகம்மது இஸ்மாயீல் ஆலிம் இன்றைய மீராபள்ளி பேஷ்இமாம் ஸைனுத்தீன் மௌலவியின் அப்பாவாவார். அன்னார் அரபி - உர்து - பார்ஸி ஆகிய மொழிகளில் ஆழமான ஈடுபாடுடையவர். தத்துவ மேதை கவிஞர் இக்பாலின் கவிதைகளை தமிழுக்குத் தந்தவர். மௌலானா றூமியின் "மஸ்னவீ ஷரீப்" நூலின் ஆழம் அறிந்து மனனமிட்டவர்.

4. காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி மீராபள்ளி வாயலில் நீண்ட காலமாக கதீபாக கடமையாற்றிய மர்ஹூம் அப்துல் கபூர் ஹாஜியார் சிறந்த அரபுக் கவிஞராவார். பிரபல முப்தியான இவர் இன்றைய மெத்தைப் பள்ளி பேஷ் இமாம் அல்ஹாஜ் அமீன் மௌலவி அவர்களின் தந்தையாவார். சவூதி அரேபிய வெளியீடான 'அக்பாறுல் ஆலமுல் இஸ்லாமி'யில் பல அரபுக் கவிதைகளை வடித்து இலங்கைக்கும், தாய் மண்ணுக்கும் புகழ் சேர்த்தார்.

5. காத்தான்குடியில் அரபுக் கவிதை புனைவதில் மிக சாதுர்யம் படைத்த ஒருவர்தான் மௌலவி அல்ஹாஜ் எம். எஸ். எம். பாருக் (பலாஹி) அவர்கள். எடுத்த எடுப்பிலே கவிதை புனையும் இவரது கவிதைகள் லிபியா, ஈராக் போன்ற நாடுகளில் பத்திரிகைகளில் முன்பக்கம் தலைப்பிட்டு வந்தன. "ந.ஃவி அப்பா" என்றும் "இலக்கியத் தாத்தா" என்றும் அழைக்கப்பட்டார். அரபு இலக்கியத்தில் கடும் புலமை வாய்ந்த இவர், பல நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். காத்தான்குடி அல்குல்லியதுர் றப்பானியா அரபுக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய இவர் அகால மரணமானார்.

6. மௌலவி அல்ஹாஜ் ஏ.எல்.எம். யஹ்யா ஒரு சிறந்த அரபுத் துறை எழுத்தாளர். நிறைய அரபு நூல்களையும், பத்வாக்களையும் எழுதியுள்ளார். அக்குறணை மதரஸாவில் ஆசிரியர் குழவில்



இருக்கின்றார். இவர் மௌலவி ஆதம் லெப்பை (பலாஹி) அவர்களின் மகனாவார். த.ஃவாப் பணியில் தன்னை அர்ப்பணித்தவர்.

7. காத்தான்குடி 2 ஆம் குறிச்சியில் வசித்து வந்த முஸ்தபா ஆலிம் (நூரி) "கப்பல் ஆலிம்" என்று அழைக்கப்பட்டார். இவரிடம் கூரிய அரபிப் புலமை காணப்பட்டது. இவர் "ஸலவாத் மாலை" புகழ் செய்யத் அஹ்மத் அதிபர் அவர்களின் தந்தையாவார். அன்னாரின் எழுத்துப் பணி காலத்தால் பதியப்பட்டது.

8. காத்தான்குடி 4ஆம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்ஹாஜ் மௌலவி ஏ. ஜீ. ஏ. அமீன் அவர்கள் தகப்பனின் அடி நின்று அரபுக் கவிதைகள் படைக்கின்றார். அமைச்சர்களின் வருகையின் போதும் ஊர் நிகழ்வுகளிலும் அன்னாரின் கவிதைகள் மேடையேறத் தவறுவதில்லை. மெட்டைக் கொடுத்தால் பாட்டாக்கி விடுவார். காத்தான்குடியின் மறைந்த முப்தி அப்துல் கபூர் ஆலிம் ஹாஜியார் அவர்களின் மகனாவார். இவர் காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ்வின் விரிவுரையாளராகவும், காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாயலின் பிரதம பேஷ் இமாமாகவும் - காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா சபையின் பத்வாக் குழு தலைவராகவுமுள்ளார். இன்றும் இவருடைய சேவை தொடர்கிறது.

## தமிழ்த் தொண்டு செய்த அறிஞர்கள்

9. காத்தான்குடியில் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த அஹ்மத் குட்டிப் புலவர் தமிழில் சிறந்த ஈடுபாடுடையவர். இவர் இயற்றிய நூலே "இசுவா அம்மானை" இந்நூல் 1990ல் ஐந்தாவது உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் இந்திய கீழக்கரையில் வெளியிடப்பட்டது.

10. காத்தான்குடியில் வாழ்ந்த அஹ்மத் நைய்னா புலவர் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரசித்தமான எழுத்தாளராக இனம் காணப்பட்டார். இவர் இயற்றிய நூலே "தீன் மாலை" எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. காத்தான்குடிக்கு பெருமை சேர்த்த எழுத்தாளர் மர்ஹூம் அஸ்ஸெய்யித் அப்துஸ் ஸமத் மௌலானா அவர்கள் அரேபிய நாடான எமன் தேசத்தைச் சேர்ந்தவர்கள். அரபியிலும், தமிழிலும் புலமை பெற்ற இவர்கள் பல பாடல்களையும், மாலைகளையும் தொகுத்துள்ளார்கள்.

12. காத்தான்குடிக்குப் பெருமை சேர்த்த அரேபிய வசம்சத்தவரான ஹுழறமௌத்தைச் சேர்ந்த அஸ்ஸெய்யித் ஸெயின் மௌலானா அறபியிலும், தமிழிலும், பாண்டித்தியம் பெற்று பல கவிதைகளைத் தந்தார்.

13. காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் புகழ் பூத்த எழுத்தாளராக திகழ்ந்த அஸ்ஸெய்யித் அப்துல் வஹ்ஹாப் மௌலானா மார்க்கப் பாடல்களும், முனாஜாத்துகளும் இயற்றினார். இவர் இயற்றிய "நினைவறி ஞானம்" நூல் மிகவும் பிரபலமானது.

14. காத்தான்குடி - காங்கேனோடையுடன் மிகத் தொடர்புடைய தோணா மௌலானா பல பாடல்களை யாத்துள்ளார். இவரின் பாடல்கள் நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

15. காத்தான்குடியின் ஆத்மீக இலக்கியத் துறையில் மிக ஈடுபாடு கொண்டவர் ஸெய்யித் ஸக்காப் பாறுல் பா அலவி மௌலானா அவர்கள். இவர் மரணத்தைப் பற்றி "ஆனந்தக் களிப்பு" எனும் தலைப்பில் நூல் வெளியிட்டார்.

16. காத்தான்குடி மெயின் வீதியில் வசித்து வந்த "ஆலியப்பா" என்றழைக்கப்படும் - ஆலி அகமது மீரான் லெப்பை ஆலிம் சிறந்த புலவர். சன்மார்க்கப் பாடல்கள் அடங்கிய "தீன் மாலை" இவரது பிரபல நூலாகும்.

17. காத்தான்குடி 5ஆம் குறிச்சி மீராபள்ளியில் கதீபாகக் கடமையாற்றிய முகம்மது காசிம் லெப்பை ஆலிம் சிறந்த புலவர். "உம்மதுல் இஸ்லாம்" எனும் நூலையும் வெளியிட்டார். மதுரை தமிழ்ச் சங்கத்தினரால் இந்நூல் பரிசீலிக்கப்பட்டது.



18. காத்தான்குடி 2ம் குறிச்சியில் பேர் பெற்று விளங்கும் குடும்பம் வெள்ளி ஆலிம் குடும்பம். ஹைதறாபாத் சூபி அவர்களைப் பின்பற்றும் வெள்ளி ஆலிம் அவர்கள் - கிரான் குளம் பகுதியில் சமய வகுப்புக்கள் நடாத்தினார். பல ஆத்மீகப் பாடல்களை எழுதிய இவர் "மஹ்பூப் மனோன்மணிக் கீதங்கள்" என்ற நூலைத் தந்தார்.

19. கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் தந்தை அ. ப.அலியார் லெப்பை ஒரு கவிஞர். இவர் சீறாப் புராணத்துக்கு விரிவுரை வழங்கியவர்.

20. காத்தான்குடியில் பிரவேச பண்டிதப் பரீட்சையில் சித்தியடைந்தவர் முகம்மத் இஸ்மாயீல் ஆசிரியர். இவர் கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் சகோதரராவார்.

21. காத்தான்குடி, களிகம்பு கோலாட்டத்தில் பெயர் பெற்ற ஊர். இங்கு "அண்ணாவியார்" என அழைக்கப்படும் பாடகர்கள் பலர் வாழ்ந்தனர். பாணி ஓடாவியார் - புலவனார் மகன் - கலந்தர் லெப்பை - ஆலியப்பாப் புலவர் - மன்னாரார் மகன் - அஹமத் லெப்பை சுலைமா லெப்பை முதலாம் குறிச்சி சீறாப்புலவன் முஹம்மத் யூசுப் புலவர் ஆவார்கள்.

22. கள்ளியர் முட்டி களிகம்புக் குழுவுக்கு அண்ணாவியாராக இருந்தவர் அகமத் லெப்பை அவர்கள். கல்லடிப்பாலம் - "காத்தான்குடி சந்தை" - "வெள்ளம் வந்த சரிதை" போன்ற பாடல்கள் இவரின் புலமைக்கு எடுத்துக்காட்டாகும். இவர் காத்தான்குடி டாக்டர்களான Dr. அப்துல் கபூர், Dr. ஆதம் லெப்பை ஆகியோரின் தந்தையாவார்.

23. காத்தான்குடி குட்வின் சந்தியில் வாழ்ந்தவர் புத்தளத்து ஆலிம் மௌலவி முகம்மது அபூபக்கர் ஆலிம் (லக்னவி) ஆவார். இவர் புரட்சிகரமான எழுத்தாளர். "கல்வியின் மகத்துவம்" - "இயேசு நாதர் ஜீவிய சரித்திரம்" - "இயேசு நாதர் சிலுவையில் அறையப்படவில்லை" - "தொழுகை" - "உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயம்" - "அந்தரத்தில் திணறும் திருக்கல்யாணம்" - "அபுல் ஈமான்" - "நபிகள் நாயகம்" - "இல்முன்னிகாஹ்" - "அறபுக் காலம்" - "ஹயாத்து நபி உண்டா?" போன்றவை இவரது நூல்களாகும்.

24. காத்தான்குடி காங்கேனோடைப் புலவர் ஆலி இஸ்மாலெப்பை சிறந்த கவிஞர். "ஈமான், இஸ்லாம் இரத்தினச் சுருக்கம்" - "40 மஸாயிஹ்மார்களின் ஸில்ஸிலா மாலை" - "தமிழ்ப் பாடல்கள் தொகுப்பு" - "நபி (ஸல்) அவர்களது ஜனன தினக் கொண்டாட்டச் சிந்து" - "ஹைத்தறாபாத் ஸூபி ஹஸரத் பேரில் முனாஜாத்து" ஆகியவை இவர் தந்த நூல்களாகும்.

25. காத்தான்குடியில் 1953 ம் ஆண்டு வெளிவந்த "அவதார அமிர்த ரஞ்சிதம்" எனும் நூல் எம். ஏ. எம். ஆலிம் ஸாஹிப் அவர்களால் எழுதப்பட்டது. இது தவிர எம். ஏ. எம். முஸ்தபா என்பவர் "முன்னேற்றக் கீதம்" எனும் நூலையும் "நான் ஒரு முஸ்லிம்" எனும் நூலை எம். எம். அபூபக்கர் என்பவரும் எழுதியுள்ளார்கள்.

26. காத்தான்குடியில் முதன் முதலில் ஸலவாத் பாடல்களை எழுதி வெளியிட்டவர் ஹஜ்ஜி முகம்மது ஆலிம் ஹாஜியார். இவர் எழுதிய நூல் "இழ்ஹாறுல் மு.்ஜிஸாத் பீ ஸலாதி அஷ்றபில் மௌஜூதாத்" என்பதாகும். இதனைத் தொடர்ந்து 1957ல் ஏ.ஆர். எம். ஸஹாப்தீன் ஸலவாத் நூலையும் 1965ல் காத்தான்குடி ஒல்லிக்குளம் கே.கே. உமர் ஆலிம் ஸலவாத்மாலை எனும் நூலையும் வெளியிட்டார். இத்துறையில் காதிமுல் அஹதியா அல்ஹாஜ் எம். ஏ. ஸெய்யித் முஹம்மத - கவிஞர் மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி) ஆகியோர் நூல்களை வெளியிட்டார்கள்.

27. காத்தான்குடி ஒல்லிக் குளத்தைச் சேர்ந்த கே. கே. உமர் ஆலிம் பல நூல்களை எழுதினார். அவை "உத்தம மனைவி, மக்கள், புருஷர்" "ஸலவாத் மாலை" "ஸலவாத் துஆ மாலை" "தராவீஹ் துஆ தர்ஜுமா" - "மூன்று புலவர் நாயகங்கள்" ஆகிய நூல்களாகும்.



28. காத்தான்குடி மெயின் வீதியில் பஸ் நிலையத்தின் முன்னால் சமாதி கொண்டிருப்போர் ராசா ஆலிம், முஸ்தபா ஆலிம் ஆகியோர் ஆவார்கள். இவர்களும் சிறந்த படைப்பிலக்கியங்களைத் தந்தனர். ஹாமித் லெப்பை ஆலிம் பல நூல்களைத் தந்தார். அவை "கவாயிதுன்னக்கைதன் பீஹாகூல் வாலிதைன்" - "கலிமாத் திறவுகோல் திரு நபி அவதாரத் தினப் பெருமை" - "யுத்த பிரார்த்தனைக் காவியம்" - "திருக்கல்யாணம்" - "ஹயாத்து நபி ஆண்டவர் அற்புதம்" - நூறுல் பலாஹ்" - "ஹயாத்து நபி ஆண்டவர் " - "ஆஷிக்கு மாலை" - "நூறுல் முபீன் பிஸ்ஸலாத்தி அலா செய்யிதில் முர்ஸலீன்" - "குழந்தையும்மா சோபனப்பாட்டு" - "ரமழானில் பிரார்த்தனை ஸலவாத்து " - ஆகியவையாகும்.

29. காத்தான்குடிக்குப் புகழ் சேர்த்த கவிஞர்களுள் கவிஞர் அப்துல் காதர் லெப்பை பெரும் இடத்தை வகிக்கின்றார். பயிற்றப்பட்ட ஆசிரியர்; பல பாடசாலைகளின் அதிபர்; 'ஆசிரியர் திலகம்', 'கவிஞர் திலகம்' என அழைக்கப்பட்டவர்; சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். இவரது கவிதை நடையே தனி. இவரது கவிதை நூல்கள் "இக்பால் இதயம்" - "ருபய்யாத்" - "செய்னம்பு நாச்சியார் மான்மியம்" - "இறஸூல் சதகம்" - "முறையீடும் தோற்றமும்" - "தஸ்தகீர் சதகம்" - "மெய்நெறி" - "ஜாவீது நாமா" - "கார்வான் கீதம்" - "என் சரிதை" "பாத்தும்மா சரிதை" - "நான்" ஆகிய நூல்களாகும். "சுண்டுக் கோப்பை // சுற்றித் திரியும் படிக்கம் // சபையை பார்த்து நகைக்கும்." இவை அவர் கவிதை வரிகள்.

30. மட்டக்களப்பில் பிறந்த எழுத்தாளர் கே. எம். எம்.ஷா, "பித்தன்" என்ற பெயரில் எழுதியவர். இந்திய "புதுமைப்பித்தனை" தனது எண்ணக் கருக்குள் முகந்தவர். புதுமைப்பித்தனைத் தேடி இந்தியா சென்றார். ஆறுமாத காலத்தை இந்தியாவில் கழித்தார். சந்தர்ப்பவசமாக இந்திய இராணுவத்தில் சேர்ந்தார். பல்வேறு நாடுகளுக்குப் பயணமானார். காத்தான் குடியுடன் மிகத் தொடர்பாளர். இவரது முதலாவது கதை "கலைஞர் திலகம்" 1948ல் தினகரனில் வெளிவந்தது. அதனையடுத்து - "கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகம்'' - "அறுந்த கயிறு " - "திருவிழா" - "பாதிக் குழந்தை" - "ஆண் மகன் " - "நத்தார் பண்டிகை" - "மயானத்தின் மர்மம்" - "ஊர்வலம்" - "தாகம்" - "அமைதி" - தாம்பத்தியம்" ஆகிய கதைகள் அவரின் முயற்சிக்கு சான்று பகர்ந்தன. வறுமைக் கோட்டில் வாழ்ந்த அவரை சமூகத்துக்கு இனங்காட்டிய பெருமை காத்தான்குடி கவிராயர் சாந்தி முகைதீன் அவர்களையே சாரும். இதன் நிமித்தம் 1990 ஜனவரியில் இந்துக்கலாசார அமைச்சு 7000 ரூபாய் பொற்கிழி வழங்கி கௌரவித்தது. 1991ல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு வாழ்வோரை வாழ்த்துவோம் விருது விழாவில் "தாஜுல் அதீப் (இலக்கிய வேந்தர்)" எனும் பட்டம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஏழ்மையில் நூல் ஒன்று படைக்க முடியாத "பித்தன் ஷா" மரணித்த பின்னர் 1995ல் கவிஞர் மேமன் கவியின் முயற்சியால் யாழ் மல்லிகைப் பந்தல் பதிப்பகத்தால் "பித்தன் சிறுகதைகள்" நூல் வெளியிடப்பட்டது. 2002 உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு ஆய்வரங்கக் கோவையில் இவரது பெயர் சிலாகிக்கப்பட்டுள்ளது.

31. காத்தான்குடியின் வீரமுழக்கப் பேச்சாளரில் ஒருவரே எம். ஐ. தாவூத் ஸாஹிப் - கலேவலைப் பகுதியில் பள்ளிவாயலில் கதீபாகக் கடமையாற்றியவர். காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தை உருவாக்கிய உத்தமர். "சூட்டுக்கோல்", "வெள்ளக் காவியம்" ஆகிய நூல்களை ஆக்கிய மேதை. இவர் மரணித்து விட்டார்.

32. காத்தான்குடியில் விதானைகளும் கவிதை சொல்வார்கள் என்றால்... அதில் முந்திக் கொள்பவர் நாகூர் ஏ பாவா - பின்னர் வந்தவர்கள் கவிஞர் ஜப்பார் விதானையும் - கவிஞர் பஷீர் அஹ்மத் விதானையுமாவர். இருவருமே கவிஞர் நாகூர் ஏ பாவா குழந்தைக் கவிஞர்கள் - சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம் என பல பத்திரிகைகளிலும் வானொலியிலும் - மேடைகளிலும் பங்கேற்றுள்ளார். "சோனிக்கு சுன்னத்து சின்னத்துப் பண்ணுவது" என்ற இவரது கவிதை நகைச்சுவையூட்டக் கூடியது. இவரது படைப்பான "நமது செல்வம்" என்ற நூல் பிரசித்தி பெற்றது.



33. காத்தான்குடிக்குப் புகழ் சேர்த்த கவிஞர்களுள் எம். எஸ். எம். ஹமீதும் ஒருவர். இவர் "மருதமைந்தன்" என்ற புனை பெயரால் அழைக்கப்படுபவர். இவரது முதலாவது நூல் "அமுது". பின்னர் "சங்கமம்" "அமுதக்கலசம்" "நறுக்குகள்" "பாவணி" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 2000 ஆம் ஆண்டில் கலாபூஷண விருது பெற்றார். இன்றுவரை பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். இவரின் கடைசியாக வந்த நூல் "வெட்டிய வேரில் ஒரு முளை " என்பதாகும்.

34. காத்தான்குடியில் கதை, நாவல் எழுதுவதில் மிக ஜனரஞ்சகமான எழுத்தாளர் "ஜுனைதா ஷெரீப்" எனப்படும் கே. எம். எம். ஷெரீப் ஆவார். இவர் "பெட்டிஷம்" எனும் சிங்கள நாவலை தமிழில் மொழி பெயர்த்தவர். "அவள் ஒன்று நினைக்க...." (துப்பறியும் நாவல்) - "அவளுக்கு ஓர் இதயம்" (சமூக நாவல்) - "மூன்றாம் முறை" (சமூக நாவல்) - "காட்டில் எறித்த நிலா" - "ஒவ்வாமுனைக் காந்தங்கள்" - "இளநரை" - (சிறுகதைத் தொகுப்பு) - "பொன்னாடை" (வானொலி நாடகத் தொகுப்பு) - "இவளுக்காகவா?" (சிறுகதைத் தொகுப்பு) - "ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது" (சமூகநாவல்) - "சாணைக்கூறை" (சமூக நாவல்) - "ஜனநாயகர்கள்" (சமூக நாவல்) - "சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார்" (நாவல்).... இப்படி பல நூல்களைத் தந்துள்ளார். 2002ம் ஆண்டு கலாபூஷணம் விருது பெற்றார். 2002ம் ஆண்டு உலக இஸ்லாமிய மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார். இவரது "பொன்னாடை" என்ற நூலுக்கும் "ஜனநாயகர்கள்" என்ற நூலுக்கும் முறையே இலங்கை சாஹித்ய மண்டலம், வடக்கு கிழக்கு சாஹித்ய மண்டலம் ஆகியவற்றின் விருதுகள் கிடைத்துள்ளன. 2005 ஆம் ஆண்டு இவர்தம் "பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார்" என்னும் நாவலுக்கு இலங்கை சாஹித்ய மண்டலத்தின் விருதும் வடக்கு கிழக்கு சாஹித்ய மண்டல விருதும் கிடைக்கப்பெற்றன. அரச உயர் பதவிகள் பலதை வகித்து வருகின்றார். இவரது நூல்கள் விரைவில் விற்பனையாகி விடும். இவரது படைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி மண்ணுக்கு என்றும் புகழ் சேர்த்தன எனலாம்.

35. காத்தான்குடியில் ஆய்வுத்துறையில் கால் பதித்தவர் அல்ஹாஜ் எம். எம். மஹ்றூப் கரீம் - ஆசிரியராக அதிபராக நீண்ட காலம் கல்விப் பணி செய்தாலும் இலக்கிய ஆர்வமுடையவர். எதையும் தயங்காது பேசுபவர்; எழுதுபவர். இவரது நூல்கள் :- "அன்புள்ள தம்பிக்கு" - "எண் வரலாறு" - "பரீட்சையில் சுலபமாக சித்தியடைவது எப்படி?" - "எண் முறை விருத்திகளும் இந்து அராபிய எண் முறையும்" - "கணித வரலாற்றில் அராபியரின் பங்கு" - "கணித பாடம் கசப்பாக இருப்பதேன்?" - "முன்னேற்றப் பாதையில் முஸ்லிம்களின் பங்கு" - "காத்தான்குடி மத்திய கல்லூரி வரலாறு" - "இன்பத் தமிழில் இனிய கட்டுரைகள்" - "இஸ்லாமிய இன்னுரைகள்" - "மற்றவர்களை நாம் எவ்வாறு கவரலாம்?" - "யார் குற்றவாளி?" - "சுகமாக வாழ்வது எப்படி?" போன்றவையாகும். (வெளிவராதவையும் உண்டு.) காயல்பட்டண இஸ்லாமிய மாநாட்டில் பங்கேற்ற இவர் 2002ல் கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார்.

36. காத்தான்குடி கவிராயர் என்றால் "கவிஞர் சாந்தி முகைதீன்" அவர்கள்தான். எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும் - இவருக்கு அதுபற்றி தெரியாமல் இருப்பதில்லை. ஆழ்ந்த புலமை மிக்கவர். ஆய்வாளர், பாவலர், நாவலர், காத்தான்குடி நவ இலக்கிய மன்ற ஸ்தாபகத் தலைவர். பாவலர் பண்ணைத் தலைவர். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் தனது எழுத்துப் பங்களிப்பை இனங்காட்டியவர். பல கவியரங்குகளை தலைமை தாங்கி நடாத்தியவர். "களிகம்பு" பாரம்பரியம் காத்தான்குடியில் வளர களம் அமைத்தவர். இளைய சமூகத்தினர் முன்னேற இலக்கிய ஏணியாக செயல்படுபவர். தமிழ் மக்கள் மத்தியில் இலக்கியத்தில் செல்வாக்குள்ளவர். 2002 கொழும்பு இஸ்லாமிய மாநாட்டில் பழந்தமிழ் இலக்கிய நூல்களை பரிசீலிக்கும் குழுவில் விசேட அங்கம் வகித்தவர்.



பல வில்லிசை நிகழ்ச்சிகளை சமூகத்துக்குத் தந்தவர். 2001ம் ஆண்டு வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சினால் வருடாந்தம் வழங்கப்படும் "ஆளுனர்" விருதும் 2001ம் ஆண்டு "கலாபூஷணம் விருதும்" 2002ம் ஆண்டில் "சாமஸ்ரீ இலக்கியச் சுடர்" பட்டமும் கிடைக்கப் பெற்றார். இலங்கை இஸ்லாமிய தமிழ் ஆய்வு மாநாட்டில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இவர் காத்தான்குடிக்கு புகழ் சேர்த்த எழுத்தாளர் என எழுத்துலகில் இனங் காணப்பட்டுள்ளார்.

37. காத்தான்குடியில் கணீர் என்ற தொனியில் உரையாற்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் மறக்க முடியாத பாத்திரத்தை வகிப்பவர் அல்ஹாஜ் மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி) அவர்கள். இவர் சிறந்த கவிஞர்; எழுத்தாளர். காத்தான்குடி நவ இலக்கிய மன்ற ஆரம்ப கால உறுப்பினரும் - சில காலங்களின் தலைவருமாவார். இலக்கிய மன்றத்தின் "பொற்கிழி" பத்திரிகையின் ஆசிரியராகவும் - "அவதானி" , "சம்மேளனச் செய்திகள்" பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் 'வரலாற்றில் ஓர் ஏடு' முதல் - அல்குர்ஆன் வகுப்பு வரை அழகாக நடாத்துகின்றார். இந்தியாவில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார். 2002 இல் கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் உலமாக்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். "கவிமணி" என்ற புனை பெயரில் எழுதும் அன்னார் "புனித ரமழான் புகழ் பாடல்கள்" - "நாயகப் புகழாரம்" - "முத்தாரம்" - "முழுமதி" - "நபிமொழி நாற்பது" - "வரலாற்றில் ஓர் ஏடு" (1-2) "வல்ல அல்லாஹ்வை வணங்கி வாழ்க" "தமிழ் பேசும் அறபுக் கவிஞரின் தனிப் பெருந்தொண்டு " "செழிக்குஞ் செல்வம்" "நன்னெறி கூறும் நபிமொழி நூறு" "சாந்தி மார்க்கத் தீர்ப்புக்கள்" ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். "ஜாமியதுல் பலாஹ்" "உலமா சபை" "சம்மேளனம்" என்று தனது எழுத்திலும் பேச்சிலும் யோசிக்கும் அன்னார் 1996ம் ஆண்டு கலாபூஷணம் விருதையும் 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் சாமஸ்ரீ விருதையும் பெற்றதுடன் மட்டக்களப்பு ஆரத்தி நிறுவனம் - அட்டாளைச் சேனையில் நடைபெற்ற மீலாத் விழா - காத்தான்குடி பள்ளிவாயல் சம்மேளன பாராட்டு விழாக்களிலும் கௌரவிக்கப்பட்டார். பல மௌலவிமார்களுக்கு இலக்கியப் பாலமாக அமைந்த இவர் காத்தான்குடியால் மதிக்கப்படவேண்டியவர்.

38. காத்தான்குடி முதல் கட்டார் வரை தெரிந்த அறிந்த எழுத்தாளர்தான் அல்ஹாஜ் மௌலவி ஏ. அப்துர் றவூப் (மிஸ்பாஹி). அன்னார் காத்தான்குடியில் "பெரிய ஆலிம்" என்று அழைக்கப்படும் அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் (ரஹ்) அவர்களின் மகனாவார். மிகத்திறமையான பேச்சாளரும், ஆய்வாளருமாவார். "ஈழத்தின் சொற்கொண்டல்" என இவருக்கு கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது. இவர் நிறைய நூல்களை எழுதியுள்ளார். அவை "பூத்துக் குலுங்கும் புனித ரமழான்" - "அலவிய்யா கோட்டைக்குள் அவ்லியாக்கள் இருவர்" - "ஈத்முபாறக்" - "ஹாஜா முயீனுத்தீன் ஜிஸ்தி (ரலி)" - "வஹாபிஸ முகவர்கள் வழிகேட்டின் தரகர்கள் " - "இஸ்லாம் கூறும் இல்லறப் பூங்காவில் இருமலர்கள்" - "ஜஸீறதுல் அரப்" "அஜ்மீர் அரசர் ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரலி)" - "நபிகள் நாயகம் நம் போன்ற மனிதனா?" -"சிந்தித்தால் சந்திப்பாய்"(பாகம் 1) "தல்கீன்" ஆகிய நூல்களாகும். இவரின் எழுத்துப்பணி இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அன்னார் காத்தான்குடி பதுரியா பள்ளிவாயலின் பிரதம பணிப்பாளராகச் செயல் படுகின்றார். அரபுக் கவிதையில் மிகவும் புலமை வாய்ந்தவர்.

39 A. காத்தான்குடியில் இருந்து ஊரின் பெயரோடு எழுதுபவர் மௌலவி யூ. எல். எம். பௌஸ் (காத்தான்குடி பௌஸ்) ஆவார். இவர் தேசிய பத்திரிகைகளிலும், வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் இலக்கியப் பங்களிப்புச் செய்பவர். இவர் 2002ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் விருது பெற்றவர். சாமஸ்ரீ கலாஜோதி, பேச்சாளர் பெருந்தகை, தத்துவ வித்தகர், நாவேந்தர், சமூக மாமதி, கவிச்சுடர் ஆகிய பட்டங்களையும்



கௌரவங்களையும் பெற்றுள்ளார். காத்தான்குடி பாவலர் பண்ணையினால் வெளியிடப்பட்ட "பா" எனும் கவிதை ஏட்டின் ஆசிரியராக இருந்த இவர் பல நூல்களையும், ஒலிநாடாக்களையும் வெளியிட்டுள்ளார். "மார்க்கத்தின் மனக்கதவு" - "போதனைப் பொக்கிஷம்" - "காதிகோட்" - "முஅத்தினின் முறைப்பாடு" - "வைகறை வாசம்" "நிறை மார்க்கத்தின் நிலா முற்றம்", "காத்திருந்த கண்கள்", "ஊடகத்தில் உதித்த உபதேசங்கள்", "விடியலை நோக்கிய விசுவாசிகள்", "சின்னச் சின்னப் பூக்கள்", "பார் எங்கும் பலஸ்தீனம்", "பாசம் சென்ற பாதையிலே....", "ரமழானின் அமல்கள்", "மாண்புறு ஜும்ஆவின் மகத்துவங்கள்" ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். "சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா" என்ற இவரது ஒலிநாடா நல்ல வரவேற்பைப் பெற்றது. இவர் தொடர்ந்தும் எழுதி வருகின்றார். பல நூல்கள் அச்சில் இருக்கின்றன.

39 B. காத்தான்குடி செய்திகள் என்றால் முதலில் நினைவில் வருவபவர் ரீ.எல். ஜவ்பர்கான். சிறந்த எழுத்தாளர், கவிஞர், மேடை முழங்க உரையாற்றுபவர், சத்தியம், தாமரை பத்திரிகைகளின் ஆசிரியர். 20க்கு மேற்பட்ட ஊடகங்களில் உள் நாடு, வெளிநாடுகளுக்கு செய்தியாளர். கதை - கவிதை, சிறுகதை, நாடகம் என நிறைய எழுதியுள்ளார். "ரணங்கள்" "மௌனதேசம்" ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு 2002ல் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. தாமரை கலை இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் நவ இலக்கிய மன்ற உறுப்பினராகவும் செயல்படுகின்றார். 2002ஆம் ஆண்டு கொழும்பு உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பாராட்டப்பட்டார். "சுவனத்து ஷுஹதாக்கள்" என்ற சிறப்பு மலரை வெளியிட்டவர். கவிமுரசு, ஊடக வித்தகர், கவிச்சுடர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார். இவரின் எழுத்து முயற்சியை "எகட்"நிறுவனம் போன்ற அமைப்புக்கள் மதித்துள்ளன. இவரின் எழுத்துப்பணிகள் தொடர்கின்றன.

40. காத்தான்குடியின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர்தான் மர்ஹூம் அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய காலமுதல் பொதுச் சிந்தனையும், அரசியல் யூகங்களும் அவருடன் ஒன்றிணைந்து காணப்பட்டன. இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் மிகவும் பங்காற்றினார். விறுவிறுப்பான கட்டுரைகளை வழங்கினார். பேச்சாற்றல் மிக்கவர். பொது நிறுவனங்களில் கூடிய பங்காற்றியவர். காத்தான்குடியின் உயர்ச்சிக்கு அவரது முயற்சியும் காரணமாக அமைந்தது. அவர் எழுதிய கட்டுரைகள் "வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்லும் முஸ்லிம் பெண்கள்" "தொலைக்காட்சியினால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கம்" "முஸ்லிம் சமூகத்தினருக்கு பிரச்சினைகள் இல்லையா?" போன்ற தலைப்புகளில் அந்நாள்களில் பரபரப்பாக வெளிவந்தன. காத்தான்குடி பட்டின சபை தலைவரான அன்னார் "அஷ்ஷஹீத்" என்ற பட்டம் தாங்கி இறையடி எய்தினார்.

41. காத்தான்குடியில் பிறந்து வெலிகமையில் மணம்பரப்பும் புலவர் எம். அப்துர் ரஹ்மான், காத்தான்குடி அ. ப. பரிசாரியார் அவர்களின் மகனாவார். இவர் முறிவு வைத்தியமும், ஆயுள்வேத வைத்தியமும் தெரிந்தவருமாவார். இவருக்கு தமிழ் புலமை அதிகம் உண்டு. பால பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றவர். வெலிகமையில் மணமுடித்து வைத்தியத் துறையில் மேம்பட்டுத் திகழ்கின்றார்.

42. காத்தான்குடியில் ஸலவாத் மாலை பாடிய பலரில் பாராட்டப்பட வேண்டிய ஒருவர்தான் அல்ஹாஜ் எம். ஏ. ஸெய்யித் முஹம்மத் அவர்கள். வானொலி முஸ்லிம் சேவையில் ஸலவாத்து மாலையை 40 வருடங்கள் வழங்கியவர். வானொலியில் வருடக் கணக்கில் அஹதியா வகுப்புக்களை நடாத்தியவர். "இஸ்லாமிய சிந்தனைச் சுடர்" - "அஹதியாவின் பாதையிலே...." - "மூன்று முத்துக்கள்" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு நடாத்திய "வாழ்வோரை வாழ்த்துவோம்" விருது விழாவில் "காதிமுல் அஹதிய்யா" எனும் பட்டம் வழங்கி



கௌரவிக்கப்பட்டார். ஸலவாத் பற்றி மூன்று நூல்களையும் எழுதினார். 2002ம் ஆண்டு கலாபூஷண விருதினையும் பெற்றார். இவர் பொது விடயங்களில் மிகவும் ஈடுபாடுடையவர்.

43. காத்தான்குடியின் மூலை முடுக்கெல்லாம் தெரிந்த எழுத்தாளரும், பேச்சாளருமே அல்ஹாஜ் ஏ. எல். அப்துல் ஜவாத் B.A. அவர்கள். இவர் ஒரு சிறந்த சட்டத்தரணியுமாவார். காத்தான்குடியில் பல பத்திரிகைகள் இவரது முயற்சியில் அச்சு வாகனமேற்றின. அவற்றுள் தேனோடை, ஒளி, அவதானி ஆகிய பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். அவற்றிலெல்லாம் ஆக்கபூர்வமான ஆக்கங்களைத் தீட்டினார். காத்தான்குடி பள்ளிவாயல்களின் சம்மேளனத் தலைவராக கடமையாற்றி, பொது விடயங்களில் கூடிய கவனம் செலுத்தியதோடு காத்தான்குடியின் நகர பிதாவாகவும் 2006ல் தெரிவு செய்யப்பட்டார். காலம் - சூழல் - உடல் நிலை என்பவற்றால் நகரபிதா பதவியையும் துறந்து விட்டார். இவர் ஆங்கில எழுத்தாளர்களின் படைப்புக்களை விரும்பிப் படிப்பார். மறைந்த அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பையின் சகோதரராவார்.

44. காத்தான்குடியில் "யங் மூர்" எனற பெயரில் எழுதிய எழுத்தாளரே அல்ஹாஜ் எம். ஐ. ஏ. முஹிதீன் ஜே. பி. அவர்கள். இவர் இலக்கிய ஆர்வலர். பல கட்டுரைகளை பத்திரிகைகளுக்கு எழதியவர். இளம் பிறை அச்சகத்தை நிறுவி பலரின் இலக்கிய நூல்கள் வெளிவர காரணமாக இருந்தவர். பழம் பெரும் இலக்கிய வாதிகளுடன் நல்ல தொடர்புடையவர். காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ்வில் நிருவாக மேல்மட்டத்தில் இயங்குபவர். "நான் பார்த்த அந்த முகம்" என்ற கட்டுரை "அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை" மலரில் இன்றும் சுடர்விடுகின்றது. காத்தான்குடியில் பல பொது நிறுவனங்களில் முன்னின்று உழைப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. காத்தான்குடியில் பல பாடசாலைகளில் அதிபராக இருந்தவர் எம். உதுமாலெப்பை B.A. இவர் சிறந்த எழுத்தாளர், பட்டதாரி, பல கட்டுரைகளை எழுதியவர். சிறுகதை எழுதும் அனுபவம் நிறைய உள்ளவர். பத்திரிகைகளுக்கு எழுதுவார். பல இலக்கிய விழாக்களை நடாத்தியவர். எழுத்தாளர் களையும், கலைஞர்களையும் என்றும் ஊக்குவித்தார். விகடமாகப் பேசுவார். நவ இலக்கிய மன்ற ஆரம்பகால உறுப்பினர். காத்தான்குடியில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய இவர் இறையடி எய்திவிட்டார்.

46. காத்தான்குடியில் ஹிஸ்புல்லாஹ் எம். பியை தெரியாதவர்கள் யாருமில்லை. அவரின் சகோதரர்தான் டாக்டர் எம். எல். நஜ்முத்தீன். இவர் மகப்பேற்றுத் துறையில் மிகவும் பிரபலம் பெற்றவர். நிறைய எழுதுவார். தமிழிலும், ஆங்கிலத்திலும் இவரது கட்டுரைகள் இடம்பெற்றன. புதுடில்லியில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற உலகளாவிய மகப்பேற்று நிபுணர்கள் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். இவரது நூல் "இஸ்லாமும் குடும்பத் திட்டமும்". இந்நூல் 2000ஆம் அண்டு வெளிவந்தது. 2002 இல் கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் "இலங்கை முஸ்லிம்களின் தனி இனத்துவக் குழு அடையாளம் பற்றிய ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்தார். இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் நிறைய ஆக்கங்கள் படைத்துள்ளார். "அல்குர்ஆனின் எண்ணியல் அதிசயங்கள்" எனும் நூலையும் எழுதியுள்ளார். எகிப்து பிரயாணத்தின் மூலம் பிர்அவ்ன் பற்றிய ஆய்வொன்றையும் செய்துள்ளார்.

47. காத்தான்குடி நவஇலக்கிய மன்றம் வளர்த்த கவிஞர்களில் ஒருவர்தான் எம். எம். நூர்முகம்மத் (நவநூர்) என்பவராவார். இவர் நிறையக் கவிதைகள் எழுதியுள்ளார். பல இலக்கிய மேடைகளில் தோன்றியுள்ளார்.1979ஆம் ஆண்டு "பருவம் பன்னிரண்டு" எனும் நூலை வெளியிட்டார்.



48. காத்தான்குடியில் பிறந்து கண்டி மாவட்டத்தில் கல்விப் பணியாற்றும் ஒரு சிறந்த கவிஞரே எம். எச். ஏ. எம். இஸ்மாயீல் ஆவார். பல கட்டுரைகள் - கதைகளை எழுதியுள்ளார். 1976ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர். பலாலி ஆசிரியர் பீட முஸ்லிம் மஜ்லிஸ் வெளியீடான "யாழ் பிறையின்" ஆசிரியராகவும் கடமையாற்றினார். தற்போது கல்ஹின்னை அல்மனார் தேசிய பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுகின்றார். நூல் விமர்சனங்களுக்கு மிகத் தகைமை பெற்றவர்.

49. காத்தான்குடியின் முதலாவது சட்டத்தரணி ஜனாப் ரீ. எல். கே. முகம்மத் ஒரு சிறந்த எழுத்தாளராவார். அவர் பல்கலைக் கழகத்தில் பயிலுகின்ற காலத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். கலை, நடிப்புத்துறையும் இவரிடம் காணப்பட்டது. இக்பால் சனசமூகத்தால் நடாத்தப்பட்ட "நீதி எங்கே?" என்ற நாடகத்தில் நடித்துள்ளார். சாதாரண வெற்றிலை வியாபாரியான தம்பிலெப்பையின் மகனான இவர் சிறந்த பேச்சாளரு மாவார். இவர் இறையடி சேர்ந்து விட்டார்.

50 A. காத்தான்குடியில் ஹாஷ்யமாக கவிதை சொல்லும் கவிஞர் ஏ. எம். இஸ்மாயீல். "ஸப்ாஜீ" என்ற பெயரில் நிறைய எழுதியுள்ளார். நவ இலக்கிய மன்ற ஆரம்ப கால உறுப்பினர். பல வில்லுப்பாட்டு நிகழ்வுகளில் ஆமாப் புலவராக பங்கேற்றார். "பா" எனும் கவிதைப் பத்திரிகையில் ஹாஸ்யமாக ஒரு கவிதை எழுதினார். "மச்சாண்ட கஞ்சி// வயிற்றுக்குள் மிஞ்சி// மாசம் இப்ப அஞ்சு// எப்ப வரும் குஞ்சு?" மேலும் பல சிந்தனைப் பாடல்களையும் எழுதியுள்ளார். "பெருமகனே! என்ற சிறுகவிதை (ஸலவாத்) நூல் ஒன்றையும் வெளி யிட்டுள்ளார். இவர் மரணமடைந்து விட்டார். இவரின் மரணத்தின் பின்னர் பாசம் சென்ற பாதையிலே, ஸபாஜீ கவிதைத் தொகுப்பு ஆகிய நூல்கள் மௌலவி காத்தான்குடி பௌஸினால் வெளியிடப்பட்டன.

50 B. காத்தான்குடியில் "ஜோக் முஸ்தபா" என்றால் யாவருமறிவர். அவர் அல்ஹாஜ் எம். ஸீ. எம். முஸ்தபா. இலக்கியப் படைப்புக்களை எழுதாவிட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் மூலம் வில்லுப்பாட்டு, நாடகம் போன்றவற்றை முன்னின்று செயல்படுத்தியுள்ளார். "கா - மு" - "தரகர் தம்பிலெப்பை" போன்ற வில்லிசைகளை கவிஞர் சாந்தி முகைதீன் எழுதி நெறிப்படுத்த முஸ்தபா ஆசிரியர் முன்னின்று வில்லிசைத்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். 2003ஆம் ஆண்டு இவருக்கு "கலாபூஷண விருது" வழங்கப்பட்டது.

51. காத்தான்குடியில் பணநோக்கத்தில் டியூஷன் கொடுக்காத ஒரு கவிஞர் என்றால் அது இளங்கோ அமீர் அலி அவர்களையே சாரும். நிறைய கவிதைகள் எழுதுவார். பட்டதாரி ஆசிரியர். தமிழில் நல்ல ஈடுபாடு உண்டு. நிறைய வாசிப்பார். அவரது தகப்பன் மீரா ஸாஹிப் ஆசிரியர் பெரும்வாசகன். அமீர் அலி "கலைத்தீபம்" எனும் பத்திரிகையின் ஆசிரியர். நவ இலக்கிய மன்றத்தின் இடைக்கால உறுப்பினராவார்.

52. காத்தான்குடியில் பிறந்து - கம்பஹா மாவட்டத்தில் கல்விப்பணியாற்றும் மீராசாஹிப் ஜமால்தீன் "காவூர் கவிஞன்" "காவூர் ஜமால்" ஆகிய பெயர்களில் கவி புனைந்து வருகின்றார். இவரது முதலாவது கவிதை நாதம் + கீதம் எனும் தலைப்பில் "பா" பத்திரிகையில் 1977ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் வானொலிக் கவியரங்குகளிலும், மேடைக் கவியரங்குகளிலும் பங்கேற்கின்றார். தற்போது மேல் மாகாணம் கம்பஹா அல் - பத்ரியா வித்தியாலயத்தில் பணியாற்றுகின்றார். கா/நவ இலக்கிய மன்ற உறுப்பினரான இவர் வில்லிசைகளிலும் கடம் வாசிப்பவராகத் திகழ்ந்தார். கஹட்டோவிட்டப் பகுதியில் மௌபியா என்ற பெண்ணை மண முடித்துள்ளார்.

53. காத்தான்குடியில் அமைதியாக ஆக்கம் படைப்பவர் மௌலவி எம். ஐ. எம். சுபையிர் ஆவார். மரபுக் கவிதை எழுதுவதில் நல்ல கெட்டித்தன மிருக்கின்றது. தினசரிப் பத்திரிகைகளில் நிறைய ஆக்கங்கள் படைத்திருக்கின்றார். தினபதி - சிந்தாமணி அவருக்கு மிகவும் களம் அமைத்தது. "இடி"



பத்திரிகையில் "கொத்து ரொட்டி" என்ற பகுதியை வாராவாரம் எழுதினார். "அழகான இருட்டு" என்ற நூலை எழுதினார். இன்னுமொரு நூலை தருவதற்கு எத்தனிக்கின்றார். பாவம் - அவர் பார்வை இழந்த நிலையில் காணப்படுகின்றார். முக்கனி பத்திரிகையின் சிறுகதைப் போட்டியில் முதலாம் இடமும், கா/ பிரதேச இலக்கிய விழாவில் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார். நவ இலக்கிய மன்ற உறுப்பினரான இவர் சிறந்த ஓவியர். பாவலர் பண்ணையின் "பா" பத்திரிகைதான் இவரை ஓவியராகத் தூண்டியது எனலாம். இன்றும் எழுதிக் கொண்டே யிருக்கின்றார்.

54. காத்தான்குடியில் பிறந்து சவூதி அரேபியாவில் இலக்கியப் பணி செய்பவர் கவிஞர் எம். பி. ஸிறாஜ்தீன். கவிதை புனைபவர். தினசரிகளில் நிறைய எழுதியவர். மேடைகளில் கவிதை படித்தவர். "ஊடாடி" என்ற பெயரில் உண்மைகளை ஒப்புவிக்கத் தவறவில்லை. "நாளை எனும் பழைய ஏழை நமக்கு விரிவது இளநீர் நல்கவே" என்ற கவிதை இதயங்களை இன்றும் தொடுகின்றது.

55. காத்தான்குடியில் தமிழ் - அரபுக் கவிதைகளில் பிரபலமான கவிஞர்தான் மௌலவி இபுறாஹீம் (நத்வி). எடுத்த எடுப்பில் கவி புனையும் ஆற்றலுடையவர். நிறைய நாளிதழ்களுக்கு எழுதியிருக்கின்றார். "அல் மிஷ்காத்" என்ற பத்திரிகையின் ஆசிரியருமாவார். மேடைக் கவிதைகளிலும் இவர் சமர்த்தர்.

56. காத்தான்குடியில் பழந்தமிழ் இலக்கியங்களில் மிக ஈடுபாடுடைய ஒருவர்தான் அல்ஹாஜ் எஸ். எம். பி. முகைதீன். இலக்கிய உரைகளுக்கு பெயர்போனவர். கவிதைகள் எழுத வல்லவர். கல்வி அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். 1400 ஆவது ஆண்டு விழா காத்தான்குடி அல்ஹிறா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது.... அவர் எடுத்த பிரயத்தனங்கள் மறக்க முடியாத ஒன்றாகும். பழைய பாடல்கள் அவர் வாயில் உதிரும்.

57. காத்தான்குடியில் ஹதீஸ் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரியாகத் திகழ்பவர் மௌலவி அல்ஹாஜ் யூ. எல். ஏ. அஷ்ரப் (ஷர்கி) அவர்கள். த..வாப் பணியில் புதிய ஆக்கங்களை எழுதி வெளியிடுகின்றார். இவர் காத்தான்குடி 2ஆம் குறிச்சியில் பிறந்து அட்டாளைச் சேனை அரபுக் கல்லூரியில் கல்வி பயின்று அதன் பின் எகிப்து பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். அன்னார் அப்கா, சவூதி அரேபியாவிலுள்ள மன்னர் காலித் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும் கொழும்பு தாருல் ஹதீஸ் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து - பல சவால்களுக்கு மத்தியில் பேனா பிடித்துள்ளார். இவர் சிறு வெளியீடுகளையும் ஒலிநாடாக்களையும் வெளியிட்டுள்ளார். இவர் அல்மனார் அரபுக் கல்லூரியை காத்தான்குடியில் ஸ்தாபித்தவராவார்.

58. காத்தான்குடியில் பிறந்து நாடெங்கும் தொலைக் காட்சி மூலம் தன்னை பிரபலப்படுத்தியவர் கவிஞர் எம். ஐ. எம். ஜாபிர் அவர்கள். கல்முனையில் உயர்கல்வி பெறுகின்ற காலமுதலே பத்திரிகைகளுக்கு நிறையக் கவிதைகள் எழுதினார். தற்போது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் மிக உயர் பதவி வகிக்கும் இவர் - தமிழ் பிரிவினால் நடாத்தப்படும் "பிரவாகம்" நிகழ்ச்சியை நடாத்தி எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியுள்ளார். மூன்றாவது மனிதன் சஞ்சிகையிலும் சிறப்பு ஆக்கங்களைப் படைத்து வருகின்றார்.

59. காத்தான்குடியிலிருந்து ஜெனீவாவில் பிரகாசிப்பவர் அல்ஹாஜ் அஷ்ஷெய்ஹ் அமீர் அஜ்வத் எஸ். எல். ஏ. எஸ். அவர்கள். அன்னார் சிறந்த எழுத்தாளர். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நீண்ட காலமாக சிறப்பான விடயங்களை ஒலிபரப்பினார். சிறந்த எழுத்தாளரான இவர் ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் செயலாளராகச் செயல் படுகின்றார். இவர் எல்லோரையும் மதித்து நடக்கும் அமைதியான எழுத்தாளராவார்.

60. காத்தான்குடிக்குப் பெருமை சேர்க்கும் எழுத்தாளர்கள் வரிசையில் பத்திரிகை நிருபர் எம். எம். நூர்தீன் சிறந்த பங்களிப்புச் செய்து வருகின்றார். தினகரன் பத்திரிகை உட்பட நவமணி ஆகிய பத்திரிகைகளுக்கு செய்திகளும் கட்டுரைகளும் எழுதி வருகின்றார். வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும் இவர் எழுதிவருகின்றார். இவர் காத்தான்குடி முத்துவாப்பா பரிகாரி அவர்களின் மகனாவார். இவர் சிறந்த சமூக சேவகர் என்பது குறிப்பிடத்தக்கது. மீள் குடியிருப்பு சம்பந்தமாக காத்தான்குடி ஒல்லிக்குளம் பற்றிய இவரது கட்டுரை மீள் குடியேற்றவாசிகளின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டது.



61. காத்தான்குடியின் நிருபர்கள் வரிசையில் எம். எம். பழ்லுல்லாஹ் சிறந்த பத்திரிகையாளர். நீண்ட காலமாக எழுதி வருகின்றார். அவரின் பணி மிகவும் பாராட்டப்பட வேண்டியது. காத்தான்குடி போக்குவரத்து சபையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய அன்னார் அது தொடர்புடைய பதவிகளில் சேவையாற்றி வருகின்றார்.

62. காத்தான்குடி அலியார் ஒரு சிறந்த எழுத்தாளர்; பத்திரிகை நிருபர்; நீண்ட காலம் பத்திரிகைத் துறையில் உழைத்தவர். இவர் பெண் எழுத்தாளர் சீ. எம். பாத்திமாவின் சகோதரராவார்.

63. காத்தான்குடியின் பாடகர் எம். அஸீஸ் சிறந்த எழுத்தாளர். தேர்தலில் குதித்தவர். அநீதிக்காகக் குரல் கொடுக்கும் எழுத்தாளர். இவரை வி. பி. அஸீஸ் என்றால் அனைவரும் தெரிந்துகொள்வார்கள்.

64. காத்தான்குடி பழைய தபால் வீதியில் பிறந்து கல்முனையில் பிரகாசிப்பவர் கவிஞர் எச். எம். இக்பால். நவ இலக்கிய மன்ற ஆரம்பகால உறுப்பினர். கவிதை இலக்கணம் கற்றுத் தேறிய அவர் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்.

65. காத்தான்குடியில் பிறந்து புருணை வரை பிரகாசிக்கும் ஓர் எழுத்தாளர்தான் ஏ. ஸீ. எல். அமீர் அலி. இவர் கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் அரும்புதல்வர். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆய்வு செய்துள்ளார். பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. காத்தான்குடியின் பழம் பெரும் வைத்தியர் முத்து வாப்பா பரிகாரியவர்களின் மகன் மௌலவி எம். ஜலால்தீன் (பலாஹி) சிறந்த எழுத்தாளர். நிறைய கவிதைகள் எழுதியுள்ளார். பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவர் ஒரு பட்டதாரி ஆசிரியரும் அரபுத் துறையில் ஆய்வாளருமாவார்.

67. காத்தான்குடியின் சிறந்த நாடக எழுத்தாளர் எம். அலீம் அவர்கள். காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் பிறந்த இவர் பல நாடகங்களை எழுதி நடித்துமிருக்கின்றார். காத்தான்குடியின் தப்லீ்ஃ ஆரம்ப ஸ்தாபகர் ஹஸன் மௌலவி அவர்களின் சகோதரராவார்.

68. காத்தான்குடியின் வளரும் எழுத்தாளர் வரிசையில் அடக்கமும், அனுபவமுமிக்கவர் ஏ. எச். எம். ஜிஹார் ("தமிழினியன் ஜிஹார்") என்பவராவார். நிறைய கவிதைகள், கதைகள் எழுதுவார். இவர் ஆக்கங்கள் பத்திரிகைகளிலும், வானொலியிலும் அரங்கேறும். பல பரிசில்களையும் பெற்றுள்ளார். 1990 ஈரான் தூதரகத்தின் கவிதைப் போட்டி 1990 இந்து சமய கலாசார அமைச்சு நடாத்திய கவிதைப் போட்டி 1991 தேசிய இளைஞர் மன்ற கவிதைப் போட்டி முதலியவற்றிலும் பரிசில்கள் பெற்றார். இப்போதும் எழுதி வருகின்றார்.

69A. காத்தான்குடியில் சிறந்த தமிழ் ஆர்வலர் அல்ஹாஜ் மௌலவி அப்துஸ் ஸலாம் சூபி ஹஸ்ரத். காத்தான்குடி 4ஆம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பல கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ளார். சிறந்த பேச்சாளருமாவார்.

69 B. காத்தான்குடி எம். முஸ்தபா செரண்டிப் முஸ்தபா எனும் பெயரில் எழுதினார். "பாச மலர்" எனும் பத்திரிகையை வெளியிட்டார். ரிஸாலா வானொலியில் கவிதைகள் வாசிப்பார். இவருடைய கவிதைகள் மிகச் சுவை பயப்பவை. அதிலொன்று: வில்லைகளையே// விழுங்கிக் கொண்டிருக்காமல்// காத்தான்குடியின்// எல்லைகளையும் எட்டிப் பாருங்கள்!



70. காத்தான்குடி முஸ்தபா கோப்ரட்டி முஸ்தபா என்ற பெயரில் அழைக்கப்படுபவர். துடிப்பான எழுத்தாளர். மேடைக் கவிகள் பாடுவார். இலக்கியக் கூட்டங்களுக்கு முதுகெலும்பாகச் செயல்படுவார். காத்தான்குடி ரிஸாலா வானொலியில் இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பார். பொது நலவாதியாவார்.

71. காத்தான்குடியைச் சேர்ந்த எம். ஏ. எம். எம். முகைதீன் ஒரு சிறந்த எழுத்தாளராவார். "அல்லாஹ் தஆலாவின் நல்லடியார்களும், வஹ்ஹாபிச அரசியலும்" போன்ற நூல்களை எழுதியவர். மர்ஹூம் மௌலவி எம். கே. அபுல்ஹஸன் காஹிரி எழுதிய "இஸ்லாத்தில் சீதனம் கைக்கூலி அனுமதிக்கப்பட்டதா?" நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். இவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஹன்ஸாட் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். 1974 - 1975, 1990 - 1991 காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் பல்வேறு பதவிகளை வகித்தமைக்காக இலங்கை ஜனாதிபதியினால் பாராளு மன்ற சேவைப் பாராட்டு மடலும், பரிசும் பெற்றவர். 1969 இல் அதி சிறந்த முஸ்லிம் எழுத்தாளர் விருது பெற்றவர். இவரின் எழுத்தாக்கங்கள் நூல் வடிவங்களாகவும், பிரசுரங்களாகவும் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இவர் முஸ்தபா ஆலிம் இப்னு அஹ்மத் லெப்பை ஆலிம் மகனாவார்.

72. காத்தான்குடியில் த்ஃவா பணி செய்யும் ஒருவரே மௌலவி அல்ஹாஜ் எம். வை. ஸைனுத்தீன் (பலாஹி, மதனி) சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர். அவரின் எழுத்துத் துறைக்கு, அவர் எழுதிய "அண்ணலாரின் பலதார மணம்" என்ற நூல் சான்றாகும். இந்நூல் 1987 ஆம் ஆண்டு கா/ஜாமிஉழ்ழாபிரீன் இஸ்லாமிய நூலகத்தினால் வெளியிடப்பட்டது. இவர் ஆலிம் பரம்பரையைச் சேர்ந்தவர்.

73. காத்தான்குடியைச் சேர்ந்த மௌலவி மனாப்தீன் அவர்கள் இலக்கிய ரசனைமிக்க எழுத்தர். சமூகத்தைப் பற்றி நிறையச் சிந்திக்கக் கூடியவர். இவர் எழுதிய "என்னருமைச் சகோதரி எங்கே செல்கிறாய்?" என்ற நூல் 1987இல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. காத்தான்குடி அலவி ஷரிபுத்தீன் அவர்கள் ஜாமிஆ நழீமியாவில் பட்டப் படிப்பை முடித்து வெளிநாடுகளுக்குச் சென்று முதுமாணிப் பட்டம் பெற்றவர்; சிறந்த எழுத்தாளர். இவரது ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

75. காத்தான்குடியில் ஐ. எல். எம். முஸ்தபா (பஹ்ஜி) என்றால் தெரியாதவர்களே கிடையாது. அவரது கட்டுரைகளும் ஆக்கங்களும் நூல் வடிவிலும், துண்டுப் பிரசுரங் கள் மூலமும் வெளிவந்தன. வானொலி யிலும் ஆக்கங்கள் படைப்பார். காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா தலைவரான இவர் "குத்பாப் பேருரைகள்" எனும் நூலை வெளியிட்டார்.

76. காத்தான்குடி ஜாமியதுஸ் ஸித்தீக்கியா அரபுக் கல்லூரி முன்னாள் அதிபர் அல்ஹாஜ் மௌலவி ஏ. ஸி. எம். றிபாய் அவர்கள் சிறந்த எழுத்தாளர்; பேச்சாளர். "நாற்பது நபி மொழிகள்" எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

77. காத்தான்குடி ஜாமியதுல் ஜமாலியாவின் முன்னாள் அதிபர் மௌலவி எம். ஏ. எஸ். எம். முபீன் அவர்கள் சிறந்த எழுத்தாளர். அவர் பரம்பரை எழுத்தாளர். அவர் எழுதிய நூல்கள் "முஸ்லிம்களின் அடையாளமும் சுவர்க்கப் பாதையும்", "இஸ்லாமும் சுத்தமும்" என்பதாகும். இவர் மரணித்துவிட்டார்.

78. காத்தான்குடி பட்டதாரிகளில் அஷ்ஷெய்ஹ் எம். பி. எம். பிர்தௌஸி (நழீமி) சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்; கவிஞர்; மௌலவி. எம். எச். எம். புஹாரி அவர்களின் அருமை மகனான இவர் வெளியிட்ட நூல் "பலஸ்தீனப் பிரச்சினை - ஒரு வரலாற்றுப் பார்வை" என்பதாகும். இவர் சிறந்த விமர்சகர்.

79. காத்தான்குடி நவாஸ் ஆசிரியர் எம். எம். மனாப் ஆகியோரும் சிறந்த எழுத்தாளர்களாவார்கள்.

80. காத்தான்குடியில் உளவளம் சம்பந்தமாக எழுதுகின்ற சிறந்த எழுத்தாளரே ஏ. எல். எம். றிஸ்வி.



இவருடைய கட்டுரைகள் தினசரிப் பத்திரிகைகளில் பெரிய அளவில் இடம்பிடித்து வருகின்றன. மனோ தத்துவச் செய்திகளை எழுதுவதில் இவர் சமர்த்தர். மட்டக்களப்பு உளவளத் துணை அதிகாரியாகவும், காத்தான்குடி மத்திய வலயக் கல்வி அலுவலகத்தில் வளவாளராகவும் கடமை புரிகின்றார்.

81. காத்தான்குடி கப்பல் ஆலிமின் மகன் அல்ஹாஜ் முஸ்தபா ஏ. கபூர் ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் காத்தான்குடி அல்அமீன் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியதோடு மீலாத்விழா மலர் ஒன்றையும் வெளியிட்டார். இவர்களது குடும்பமே எழுத்துப் பரம்பரைதான்.

82. காத்தான்குடி 7ஆம் வட்டாரத்தில் மாக்கான் மஜீத் என்றால் அனைவரும் அறிவார்கள். நல்ல எழுத்தாளர். அரசியல் விடயமாக நிறைய எழுதியுள்ளார். நல்ல பேச்சாளர். நல்ல வாசகர். இலக்கியத்தில் தன்னை ஈடுபாடாக்கிக் கொண்டவர். இவர் மரணித்து விட்டார். மாக்கான்(ட) மஜீத் இவர்தான்.

83. காத்தான்குடி 5ஆம் குறிச்சியைச் சேர்ந்த டாக்டர் ஐ. எல். எம். றிபாஸ் சிறந்த எழுத்தாளர். இவர் பல்கலைக்கழகத்தில் பயிலும் போது கலாசார திணைக் களத்தால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சாகித்திய விழா சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். விவாத அரங்குப் போட்டி களிலும் பங்கேற்பார்.

84. காத்தான்குடி நவ இலக்கிய மன்ற உறுப்பினர் களில் எம். ஸி. அமீனுல்லாஹ் பீ. ரீ. முகைதீன் பிச்சை ஆசிரியர் எம். எம். எம். பாறூக், எம். எல். ஏ. லெத்தீப் ஆகியோர் கவிதை - நாடகம், வில்லுப்பாட்டு போன்ற துறைகளில் ஈடுபாடு காட்டியோராவர்.

85. காத்தான்குடியில் கலைத்துறையில் ஆர்வம் காட்டி எழுதி வருபவர் எழுத்தாளர் எஸ். ஏ. கே. முகம்மத் ஹஸன். இவர் இளம் காலத்திலேயே கையெழுத்துப் பத்திரிகையை நடாத்தினார். சினிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் எடுக்க முயற்சித்தார். இன்றைய காத்தான்குடியின் றிஸாலா F.M சேவையின் பணிப்பாளராவார். இவர் சிறந்த புகைப்படப் பிடிப்பாளர்.

86. காத்தான்குடியில் பல நூல்களை எழுதி வெளியிட்டவர். எம். எம். எம். இபுறாஹீம் "மன்னாதி மன்னன்" இவர். "எண் அதிஷ்டம்", "ஹாஜாவை தாஜா செய்யலாமா?" போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

87. மௌலவி எஸ். எம். எம். முஸ்தபா சிறந்த எழுத்தாளர். பத்திரிகை, வானொலியில் நிறையப் பங்கேற்கின்றார். "ஆபூ மிப்ராஹ்" என்ற பெயரிலும் ஆக்கங்கள் படைக்கின்றார். நவமணி பத்திரிகைக்கு விசேட நிருபராகக் கடமையாற்றுகின்றார். ஸலவாத் பற்றி நிறைய பேசியும் எழுதியும் வருகின்றார்.

88. காத்தான்குடியில் வாழ்த்து எழுதும் எழுத்தாளர் எம். எம். எம். முகைதீன் (வெளிச்சம்) அவர்கள். இவர் இலக்கியத் தாகம் கொண்டவர். பொது வேலைகளில் தன்னை அர்ப்பணித்தவர். திருமணம், பொது வைபவம் அனைத்திலும் பாராட்டுப் பத்திரங்கள் எழுதுவதில் நல்ல ஈடுபாடுடையவர். அரசியல் பேச்சாளர், நவ இலக்கிய மன்றம், பாவலர் பண்ணை போன்ற கழகங்களில் கால் ஊன்றியவர். அகால மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

89. காத்தான்குடியில் இளம் குமரன் பரீத் சிறிய வயது முதல் எழுதத் துணிந்தவர். சவூதி பயணத்தின் பின்னர் எழுதுவதில் பின்வாங்கினார். இலக்கிய ஆர்வம் கொண்டவர். இளங்குமரனாகவே இருக்கின்றார்.

90. காத்தான்குடி எஸ். மீரா சிறந்த எழுத்தாளர். பத்திரிகை, வானொலிகளுக்கு நிறைய எழுதியவர். எழுதிக் கொண்டே இருக்கின்றார். இலக்கியம் என்றால் இவருக்கு அலாதியான சுவை! தற்போது பதுளையில் இருந்து கொண்டு இலக்கியப் பணிசெய்கின்றார்.

91. காத்தான்குடியில் பிறந்து பதியத்தலாவையில் தொழில் செய்து எழுதுபவர்தான் கே. எம். பாறூக். பதியத்தலாவ பாறூக்,"கலைநதி"ஆகிய புனை



பெயர்களிலும் எழுதுவார். இலங்கையில் பிரபல தினசரிகளில் இவரது கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்துள்ளன. மேடைக் கவிதைகளில் இனிப்பான வார்த்தைகளை வழங்குவார். சிங்களத்திலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலி மஞ்சரியில் நிறைய எழுதியவர். குருநாகல் நகர மண்டபத்தில் 2006 இல் "கலைத் தீபம்" என்ற இலக்கிய விருதும் 2007 இல் கலைப் பரிதி என்ற சாஹித்ய விருதும் 2008 இல் சாமஸ்ரீ தேசமான்ய விருதும் 2009 இல் கலாபூஷண அரச விருதும் பெற்றார். அதிகமான நூல்களுக்கு கவிதை அணிந்துரை செய்பவர். இலக்கியவாதிகளின் தொடர்பு அதிகமான இவர் இன்றும் எழுதிக் கொண்டேயிருக்கின்றார். இவரின் "நபியமுதம்" எனும் பாவண்ணத் தொகுதி வெளிவரக் கண் சிமிட்டுகிறது.

92. காத்தான்குடியில் பிறந்து அட்டுளுகமையில் வாழ்ந்து, எழுதிக் கொண்டிருப்பவர்தான் எம். எல். எம். அன்ஸார். இவர் சிறந்த படைப்பாளி; மரபுக்கவிதைகள் எழுதுபவர். தினசரி ஏடுகளில் கவி நிலா, காத்தான்குடி அனு ஆகிய பெயர்களில் எழுதுவார். "கவி நிலா" என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடாத்தியவர். "இடி" பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றியவர். 2002இல் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இளம் படைப்பாளியாகப் பாராட்டப் பெற்றார்.

93. காத்தான்குடியிலிருந்து கொண்டே அபூதாபி போன்ற நாடுகளுக்கு தனது இலக்கியப் பங்களிப்பை வழங்குபவர் எம். எஸ். ஏ. மஜீத் ("மதியன்பன் மஜீத்") என்பவராவார். சிறந்த கவிஞர். "முக்கனி" "அலசல்" ஆகிய பத்திரிகைகளை நடாத்தியவர். தற்போது "நிலாக்ஸ்" என்ற பத்திரிகையை நடாத்துகின்றார். அபூதாபி போன்ற நாடுகளுக்கு அதன் சேவையை விஸ்தரித்தார். நூற்றுக்கணக்கான இசைப் பாடல்களை உருவாக்கியவர். வானொலியிலும் இவரது பாடல்கள் ஒலிபரப்பப்படும். அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கான பாடலை வடிவமைத்தவர். ஷுஹதாக்கள் மலர் வெளியீட்டுக் குழவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தவர். காத்தான்குடி நவ இலக்கிய மன்ற உறுப்பினர். தொடர்ந்து எழுதிவருகின்றார்.

94. காத்தான்குடி எம். ஜுனைத் சேர் ஒரு சிறந்த எழுத்தாளர். காத்தான்குடி ரிஸாலா வானொலி மூலம் நல்ல இலக்கியப் படைப்புகளை வழங்கியவர். ஹாஷ்யமாக இலக்கியங்களைச் சொல்லக் கற்றுக் கொண்டவர். இவருக்கு இளமட்டங்களில் நல்ல வரவேற்பு உண்டு. சிறந்த அறிவிப்பாளர். இலக்கியக் கூட்டங்களில், மேடைகளில் இவருக்கு நல்ல கிராக்கியுண்டு.

95. காத்தான்குடியில் இலக்கிய ஆர்வலரும் நல்ல எழுத்தாளருமான எஸ். எல். எம். சுபைர் B.A (Hons) SLPS.I காத்தான்குடி மில்லத் வித்தியாலய அதிபர். காத்தான் குடி வரலாற்று நூல் உருவாக உழைத்தவர். இலக்கியக் கூட்டங்கள் அனைத்திலும் சட்டத்தரணி ஜவாத் B.A அவர்களுடன் இணைந்து சமூகமளிப்பார். நல்ல குணாதிசயம் கொண்டவர்.

96. காத்தான்குடி ஒல்லிக்குளம் பகுதியில் சிறந்த எழுத்தாளராகத் திகழ்பவர் எம். எஸ். எல். எம். அன்ஸார் B. Aஅவர்கள். இவர் சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பவர்; ஆசிரிய ஆலோசகர்; சிந்தனையாளர்; நல்ல குணப் பாங்கு பெற்றவர்; பல கட்டுரைகளை எழுதியவர்.

97. காத்தான்குடி பாலமுனைக் கிராமத்தில் எழுதுபவர், ஆய்பவர், ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் எம். ஐ. எம். முஸ்தபா அவர்கள். சமூகத்தைப் பற்றி நிறைய சிந்திப்பவர். நல்ல விடயங்களை எழுத்து ரூபத்தில் தருபவர்.

98. காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் வாழும் கவிஞர் எச். எம். றஹீம் சிறந்த கவிஞர். பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். உலக இஸ்லாமிய மாநாட்டு மலரில் இவரது கவிதை பிரசுரமாகியுள்ளது. இவர் ஷம்ஸ் வானொலியின் அறிவிப்பாளர்.



99. காத்தான்குடி றபாய்தீன் சிறப்பாக கவிதை படைப்பவர். நிறையப் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். ஹாஜா ஜீ கலைவட்டத்தின் மூலம் தற்போது எழுதி வருகின்றார். மனைவியின் பெயரிலும் அதிகமான கவிதைகளைத் தந்துள்ளார்.

100. காத்தான்குடி மௌலவி எம். எம். இக்பால், மௌலவி பீ. எச். முகம்மத், எம். எம். எம். மீராஸாஹிப் ஆகியோர் கவிதை புனைய ஆற்றல் பெற்றவர்கள்.

101. காத்தான்குடியில் நீண்ட காலம் பத்திரிகை அனுபவம் பெற்றவர் ஜனாப் பூவி றஹ்மதுல்லா - இவர் காலத்துக்கேற்ற வகையில் மக்களிடம் இலக்கியம் சென்றடைய வழி செய்பவர். புரட்சிகர எழுத்தாளர். தற்போது "வார உரைகள்" என்ற பத்திரிகையை நடாத்துகின்றார். நீதிக்காகப் போராடுபவர். தீப்பொறி அந்தனிசில் ஸ்டைலில் எழுத வல்லவர். அடி குத்துக்கும் ஆளானவர். கருத்துக்களுக்குப் பயந்து ஒளித்து ஒதுங்குபவர் அல்லர். அலசியலிலும் ஆழ்ந்த புலமையுள்ளவர். கிழக்கு மாகாணத்தில் இவருடன் போட்டி போட்டு பத்திரிகை நடத்த இன்னொருவர் பிறந்துதான் வரவேண்டும்!

102. காத்தான்குடி நவ இலக்கிய மன்ற தற்போதைய செயலாளர் காத்தான்குடி ஜுனைதீன் சிறந்த கவிஞர். பத்திரிகைகளுக்கு அதிகம் எழுதுவார். "இன்றும் மனிதர்களாக...." என்ற கவிதை நூலை வெளியிட் டுள்ளார். இளைய கவிஞர்களை தூக்கிவிட கவிஞர் சாந்திமுகைதீனுடன் கை கோத்து நிற்கின்றார். இவரின் "ஒரு கூட்டின் ஆதங்கம்" என்ற புதுக் கவிதை நூல் வெளிவர ரெடி!

103. காத்தான்குடியில் வெளிவரும் "நமது பாதை" பத்திரிகை ஆசிரியர் எம். எம். காசிம் அவர்கள் சிறந்த ஆய்வுக்கு வழிவகுக்கின்றார். வீடு வீடாக வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த தாமாகவே சென்று விற்பனையும் செய்கின்றார். இவர் முன்னாள் ப. ஆ. ம. தலைவர்.

104. காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் ஏ. எச். முகம்மத் என்றால் தெரியாதோர்கள் இல்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு சிறந்த பத்திரிகை நிருபர். தினபதி மூலம் சமூதாயத்துக்கு சேவை செய்தவர்.

105. காத்தான்குடியின் சுறுசுறுப்பான எழுத்தாளர் பீ. எம். சுபைர்கான் கவிதை - கதைகளை நிறைய எழுதுவார்.

106. காத்தான்குடி 4ஆம் குறிச்சி கணக்கப்பிள்ளை ஹாஜியார் லேனில் மிகப் பிரபலமாக எழுதிய எழுத்தாளர்தான் ஏ. யூ. எச். முகம்மத் (உரிமைப்போர்) அவர்கள். இவர் ஊரில் நடைபெறும் அநீதிகளை கண்டு அவ்வப்போது எழுதி பிரசுரம் வெளியிட பின்னிற்காதவர். உரிமைப் போர் என்ற தொடரில் எண்ணிக்கையற்ற பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். "தேனோடை" என்ற பெயரில் பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டார். இவர் முன்னாள் மெத்தைப் பள்ளிப் பாடசாலை அதிபர் ஏ. யூ. அவர்களின் சொந்தச் சகோதரராவார். இவர் இறையடி எய்திவிட்டார்.

107. காத்தான்குடி 4ஆம் குறிச்சியில் பிறந்தவர் எம். ஐ. எம். சின்னலெப்பை பீ. ஏ. இவர் காத்தான்குடியின் முதலாவது பட்டதாரியாவார். இவர் தனது எழுத்துப் பணிகளை மலர்களுக்கு எழுதுவதோடு மட்டுப்படுத்திக் கொண்டார். சேவைத் தூதனில் எழுதிய "தொழில் தேசிய மயம்" போன்ற கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இவர் காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயம், பலாங் கொடை ஜீலான் மத்திய கல்லூரிகளில் அதிபராகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றினார்.

108. காத்தான்குடி எஸ். கே. ஹாஜியார் லேனில் பிறந்தவர் நஜீப் ஆசிரியர். இவர் நிறைய கவிதைகள் எழுதினார். ஓட்டமாவடி மகா வித்தியாலயம், கா/மில்லத் மகாவித்தியாலயங்களில் கற்பித்த இவர் மர்ஹூம் ரீ. எல். மாஸ்டரின் மகளை மணமுடித்துள்ளார். அடிக்கடி பத்திரிகைகளுக்கு எழுதுகின்றார்.

109. காத்தான்குடியில் மஸாஹிம் என்று ஒரு எழுத்தாளர் "மஸாஹி" என்ற புனை பெயரில் எழுதுவார். புதுக் கவிதைகள் அவரின் ஊற்று. 2000ஆம் ஆண்டு "மிஸ்டர் மிலேனியம்" எனும் பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். மதியன்பன் மஜீதின் "நிலாக்ஸ்" பத்திரிகை குழுவிலும் அங்கம் வகிக்கின்றார்.



110. காத்தான்குடியின் இளம் எழுத்தாளர் கவிஞர் றம்ஸி நிறைய பத்திரிகைகளுக்கு எழுதுகின்றார். கவியரங்குகளிலும் பங்கேற்கின்றார். இவர் கவிஞர் சிறாஜ்தீனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

111. காத்தான்குடி இளம் எழுத்தாளர்கள் வரிசையில் எம். பீ. எம். றியாஸ் கவிதைத் துறையில் விரும்பிப் பிரவேசித்துள்ளார். "இளம் தென்றல்" என்ற பெயரிலும் எழுதி வருகின்றார்.

112. கவிஞர் யூனுஸ் மேடைக் கவிதைகளிலும், பத்திரிகைக்கு எழுதுவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றார். இவர் சிறந்த மேடைக் கவிதைகளையும் படிக்கின்றார். இளம் எழுத்தாளர்.

113. காத்தான்குடியில் இளம் எழுத்தாளர் வரிசையில் நிலாக்கவி இர்ஹாம் நல்ல கெட்டிக்காரர். சின்ன வயதிலிருந்தே பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கி விட்டார். தற்போது சட்டப் படிப்புக்காக பல்கலைக்கழகம் செல்கின்றார்.

114. காத்தான்குடி விதானைமார் வரிசையில் கவிஞர் ஜப்பார் துண்டுப் பிரசுரங்களாகவும், பத்திரிகை ஆக்கங்களாகவும் கவிதைகள் எழுதுகின்றார். இவரின் சொந்த ஊர் காங்கேனோடை. இவர்களின் குடும்பம் புலவர் பரம்பரை.

115. காத்தான்குடி விதானைமார்களில் ஜனாப் பஷீர் அஹ்மத் சிறந்த எழுத்தாளர். இலக்கிய ஆர்வலர். மர்ஹூம் ரீ. எல். மாஸ்டரின் புத்திரர். ஊழலுக்குப் பயந்த நல்லவர். அவர் போல் பலரும் உள்ளனர்.

116. காத்தான்குடி 1ம் குறிச்சியில் பிறந்து சிறந்த பத்திரிகையாளராக மிளிர்ந்தவர்தான் எம். எம். எஸ். முகம்மத் அவர்கள். மீராலெப்பை மரைக்காயரின் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனான இவர் கா / அல் நாஸர் வித்தியாலயம், மட் / சிவானந்த வித்தியாலயம், காலி ப·ஜதுல் இபுறாஹீமிய்யா அரபுக் கல்லூரி, வெலிகம பாரி அரபுக்கல்லூரி - கபூரியா அரபுக்கல்லூரி, அட்டா ளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகிய வற்றின் பழைய மாணவராவார். 1988 முதல் 2000 வரை லேக் ஹவுஸ் நிறுவன பத்திரிகைகளான டெயிலி நியூஸ், சண்டே ஒப்சேர்வர், தினகரன் ஆகியவற்றின் நிருபராக கடமையாற்றிதோடு இலங்கை வானொலி, ரூபவாஹினி, பி.பி.சி, ரொய்டர் போன்ற நிறுவனங் களுக்கும் செய்திகளை வழங்கினார்.ஐந்து பிள்ளைகளின் தந்தையான மௌலவி எம். எம். எம். எஸ். முகம்மத் அவர்கள் இறையடி சேர்ந்துவிட்டார்.

117. காத்தான்குடி 2ம் குறிச்சியில் மிகவும் பிரபலமானவர்தான் ஏ. எம். இஸ்மாயீல் ஆசிரியர் (தப்லீ·. இஸ்மாயீல் சேர் என்றால் எவரும் இலகுவில் புரிந்து கொள்வார்கள்.) மரவேலை தொழிலுடன் கூடிய ஆசிரியராகக் கடமையாற்றிய அன்னார் 1961ல் அல்ஹாஜ் யூசுப் நூலகத்தை ஊரிலே திறந்து வைத்தார். சம்மாந்துறை தொழில் நுட்பக்கல்லூரி உருவாக காரணமாக இருந்தவர். 1970ஆம் ஆண்டு முதல் காத்தான்குடி வரலாறு எழுதும் பணியில் ஆய்வாளர் எம். எம். எம். ம·றூப் கரீம் அவர்களுடன் இணைந்து பழைமை வாய்ந்த வரலாறுகளை ஒன்று திரட்டினார். சிறந்த எழுத்தாளரான இவர் எப்போதும் பொது நன்மைகளை சிந்திக்கக் கூடியவர்.

118. காத்தான்குடி இளம் எழுத்தாளர் வரிசையில் ஜொலிப்பவர் "பிரகாசக்கவி" எம். பி. அன்வர் அவர்கள். காத்தான்குடி 3ஆம் குறிச்சியினை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மித்திரன் - தினக்கதிர் - ஜனனி - தினகரன்- ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளில் எழுதி வருகின்றார்.

119. இளம் எழுத்தாளர் வரிசையில் எம். பீ. எம். பைரூஸ் ஒரு நல்ல இடத்தைப் பிடித்திருக்கின்றார். வீரகேசரி பத்திரிகையின் வெளியீடான "விடி வெள்ளி" பத்திரிகையின் பிரதான ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். பிரபல எழுத்தாளர் அல்ஹாஜ் மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி) அவர்களின் மகனாவார். சிறிய வயதிலேயே ஒரு தேசியப் பத்திரிகைக்கு பிரதம ஆசிரியராக இருந்த பெருமை காத்தான்குடி மகன் பைரூஸையே சாரும்.

120. காத்தான்குடி 6ஆம் குறிச்சியைச் சேர்ந்த சித்தீக் ஆசிரியர் ஒரு நல்ல கவிஞர் - ரசனையாளர். நிறைய கவிதைகள் எழுதியுள்ளார். இலக்கியக் கூட்டங்களுக்கு சமுகமளித்து நல்லபிப்பிராயங்களைச் சொல்லக் கூடியவர். காத்தான்குடி நவ இலக்கிய மன்ற உறுப்பினர். நஸீலா ஹாட்வெயாரில் நாளும் சந்திக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டவர். நல்ல குணசீலராவார்.

121 A. காத்த நகர் கலீல் சப்ரான் ஓர் ஒரு இளம் கவிஞர். நிறைய பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். இவரின் வளர்ச்சி கவிதைகளில் ஊற்றெடுக்கின்றது. நல்ல சிந்தனை நயங்களுடன் கூடிய நகர்த்தல். முன்னேற்றம் காணக் கூடிய முகச் சாயல் தோன்றுகின்றது.

121 B. காத்தான்குடி ஆறாம் குறிச்சியைச் சேர்ந்த அல்ஹாஜ் மௌலவி எம். ஐ. எல். அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் சிறந்த எழுத்தாளர். இந்தியாவில் தனது கல்விப் பணியை முடித்தவர். தினகரனில் நிறைய இஸ்லாமியக் கட்டுரைகளை எழுதினார். இபுரா லெப்பை ஹாஜியார் அவர்களின் மகனான இவர் கரீம் பிரதர்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

121 C. காத்தான்குடியில் நல்லதொரு எழுத்துப் பணியை மேற்கொண்டவர் எம். காஸிம். இவர் முன்னாள் பிரதேச சபைத் தலைவர். இவர் "நமது பாதை" என்ற ஒரு பத்திரிகையை வெகு சிறப்பாக நடத்தினார். 2006இல் இப்பத்திரிகை காத்தான் குடியில் கலை கட்டியது. வீடு வீடாகச் சென்று பத்திரிகை விற்று காரியம் நடாத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. காத்தான்குடியில் பாடல்களை எழுதிப் பாடுவதில் காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் வசித்து வந்த "ஜெயிலான்" என்பவர் பிரபலமானவர். அவரின் பாடல்கள் அனைவரையும் கவரும். "நடந்துபோனேன் கல்முனை ஊருக்கு// சேக்கேசு நானும் பார்க்க// அதைப் போல புதினம் ஒன் றில்லை// என் தம்பிமாரே// அதைப் போல புதினம் ஒன்றில்லை" போன்ற பாடல்கள் அவரின் திற மைக்குச் சான்றுகளாகும். இறையடி எய்திவிட்டார்.

123. காத்தான்குடி 2ஆம் குறிச்சியில் வாழ்ந்த பொட்டனிக்காற தம்பி லெப்பை விகடமாகப் பேசுவார். அவரின் அன்பு மகன் ரீ. எல். அஸீஸ் சிறந்த பாடகர். இசையமைத்துப் பாடுவார்; விகட மாகப் பேசுவார்; நடிப்பார். இவருக்கு காத்தான்குடி இஸ்லாமிய கலாசார நலன்புரிச் சங்கத்தினால் "அஜாயிப் அஸீஸ்" என்ற கௌரவப் பெயர் வழங்கப்பட்டது.

## காத்தான்குடியின் பெண் எழுத்தாளர்கள்

124. காத்தான்குடி பாத்திமா சிறந்த எழுத்தாளர். சிறுகதை, கவிதை, உருவகக் கதைகள் என நிறைய பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் எழுதியுள்ளார்; எழுதுகின்றார். 1992இல் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் தின விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டார். காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் "சிறுகதைச் செல்வி" என்ற பட்டத்தை வழங்கியது. மில்லத் விளையாட்டுக்கழகம் இவருக்கு விருது வழங்கி கௌரவித்தது. பெண்கள் மேம்பாட்டு அமைப்பு இவருக்கு விருது வழங்கி கௌரவித்தது. 2003 ஆம் ஆண்டு "அத்தனையும் முத்துக்கள்" என்ற நூலையும் 2004ஆம் ஆண்டு "பொய்த் தூக்கங்கள்" என்ற நூலையும் "நா இடற வாய் தவறி" என்ற கவிதை நூலையும் வெளியிட்டார். இவரின் நூல் வெளியீட்டுக்கு வானொலிக் குடும்பமே வந்து கலந்து கொள்வது சிறப்புக்குரியது. காத்தான்குடி நகர சபையில்



நடைபெறுகின்ற இலக்கிய முயற்சிகளுக்கு முன்னின்று உழைக்கின்றார். கலாபூஷண விருது பெற இவர் சிபாரிசு செய்யப்பட வேண்டியவரே என்பது குறிப்பிடத் தக்கது.

125. காத்தான்குடி பரீதா கவிதை - கதை எழுதுவதில் நல்ல ஈடுபாடுடையவர். பத்திரிகையிலும், வானொலியிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்தன. "நான் மௌனத்தாகப் போகின்றேன்" என்ற இவரது வானொலிச் சிறுகதை நல்ல வரவேற்பைப் பெற்றது. தினகரன் பத்திரிகையில் இவரது முதல் கவிதை "என்னடி செய்வேன்?" என்ற தலைப்பில் பிரசுரமானது. மிக அமைதியானவர். படித்த குடும்பத்தில் பிறந்தவர்.

126. காத்தான்குடி 6ஆம் குறிச்சியில் உம்முஹானி அமானி என்ற பெண் எழுத்தாளர் நிறையப் பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். அழுத்தமான கவிதைகளை காலம், சூழல் பார்த்து எழுதுவார். இவர் மிக அமைதியாக எழுதிக் கொண்டிருப்பவர்.

127. காத்தான்குடியில் இன்றும் பல பெண் எழுத்தாளர்கள் உள்ளனர். அந்த வரிசையில் .... அஸீஸா ஆரிபீன், புதிய காத்தான்குடி ஜுவைரியா றஹ்மதுல்லா ஆகியோரைக் குறிப்பிடலாம். அஸீஸா ஆரிபீன் பா பத்திரிகையில் எழுதிய "மெத்தைப் பாய்க்கு விலை பத்தா?" என்று தொடங்கும் கவிதை இன்றும் இதயத்தில் வாழ்கிறது.

128. காத்தான்குடி ஷரீப் புரக்டர் வீதியைச் சேர்ந்த ஸியாமா எம். ஸாஹிர் ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் கட்டுரைகளை எழுதிவருகின்றார். இவருடைய கட்டுரை 2005 ஆம் ஆண்டு அகில இலங்கை மீலாத் விழாவில் முதலாம் இடத்தைப் பெற்று காத்தான்குடிக்கு பெருமை தேடித் தந்தது.

130. காத்தான்குடி பெண் எழுத்தாளர் வரிசையிலே அடுத்து இடம் பெறுபவர் காத்தான்குடி அப்துல் ஜவாத் ஆலிம் மாவத்தையில் பிறந்து எழுதி வரும் நஜீபா றூபி. 1994இல் இருந்து எழுதத் தொடங்கிய இவர் "பெண்ணியா" என்ற புனை பெயரில் தன்னை அறிமுகப் படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"உடப்பிரவெளி", "பொற்றாகி நின்ற வெளி" கவிதைத் தொகுதிகளுக்கு கவிதை எழுதியதோடு, "வானமே எல்லை" விபவியின் சுதந்திர இலக்கிய விழாவில் பரிசு பெற்றவர். "என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை" என்ற நூலை அண்மையில் வெளியிட்டு வைத்தார். ரூபவாஹினி தயாரிப்பாளர் எம். ஐ. எம். ஜாபிரின் சகோதரியும், சட்டத்தரணி ரூமியின் மனைவியுமாவார்.

131. காத்தான்குடியில் பிரபலமான பெண் எழுத்தாளர் நஸீலா மீரா முகைதீன் ஆவார். 1980 முதல் எழுத ஆரம்பித்த இவர் வானொலி, பத்திரிகைகளுக்கு நிறைய எழுதிக் கொண்டிருக்கின்றார். 2009ஆம் ஆண்டு அரச ஊழியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் "யாத்திரைப்பூக்கள்" என்ற கதைக்கு 1ஆம் இடத்தையும் "சந்தோஷஆண்டே" என்ற பாடல் ஆக்கத்துக்கு 1ஆம் இடத்தையும் பெற்றார். 2010ஆம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் 2010இல் அரச ஊழியர் சங்கத்தினர் நடாத்திய போட்டியில் "வாழ்க்கை" என்ற கதைக்கு 1ஆம் இடத்தையும் பெற்றார். இவர் "கனவுக்குள் கவிக்கும்" எனும் நூலை 2010இல் வெளியிட்டுள்ளார். இவரின் ஆக்கங்களுக்கு "விடிவெள்ளி" "நவமணி" பத்திரிகைகளில் விசேட களம் வழங்கப்படுகின்றது.


132. காத்தான்குடியில் சிம்மா ராணி என்ற பெயரில் எழுதுபவர் அப்துல் மஜீத் பஸீலா ஆவார். இவரின் திறமை வெளிப்பாடாக 'சிதறிய சிந்தனை முத்துக்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. காத்தான்குடி - 5 கல்லூரன் விதானை அவர்களின் மூத்த மகளான இவரது எழுத்துப் பணி தொடர்கிறது.



# என்னை வளர்த்த இலக்கியத் தாரகைகள்




கவிஞர் சாந்தி முகைதீன், கவிஞர் மௌலவி எம். எச். எம். புகாரி ஆகியோர் மௌலவி பௌஸ் அவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் போது....




எழுத்தாளர் அல்ஹாஜ் யங் ஜூர் மொகைதீன், கவிஞர் சாந்தி முகைதீன், கவிஞர் பத்யதுல்லா பாரூக் ஆகியோர் மௌலவி பௌஸ் அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரம் வழங்கும் போது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்னூலாசிரியர் எம். எம். எம். மஃறூப் கரீம், மௌலவி பௌஸ் அவர்களுக்கு மாலை அணிவித்து கௌரவிக்கும் போது....



பன்னூலாசிரியர் ஜுனைதா ஷெரீப், கவிஞர் சத்தி முன்னிலையில் ஆசிரியர் மௌலவி கத்தான்குடி பௌஸ் அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கும் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் புகழ் கூறும் எழுத்துக்கள்....



1977 ஆம் ஆண்டு பலப்பிட்டியில் இருந்து வெளி வந்த 'ஜும்ஆ' பத்திரிகையின் ஆசிரியர் பலப்பிட்டி அருஸ் அவர்கள் எனது தந்தைக்கு **காத்தான்குடி பௌஸ்** என்று கௌரவம் கொடுத்து எழுத வைத்தார்.

எங்கிருந்தாலும் எனது தந்தை ஊர் மண் வாசம் நிரம்பியவர். எப்போது ஆக்கங்கள் படைக்கும் போதும் காத்தான்குடி என்ற பெயர் தாங்கியே எழுதுவார்.

எங்கள் வீட்டில் எப்போதும் இலக்கியவாதிகளும் உலமாக்களும் வருவார்கள். நவ இலக்கிய மன்ற எழுத்தாளர்கள் அதிகமதிகள் வருவார்கள். அவர்களின் ஆக்கப் பணிகளும் பெயர்களும் மங்கி விடாது எனது தந்தை 'பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள் அல்லது காத்தான்குடியில் கலம் பிடித்த எழுத்தாளர்கள்' என்ற தலைப்பில் இந்நூலைத் தந்துள்ளார். நவ இலக்கிய மன்றத்துக்கும் வயது ஐம்பது. இந்நிலையில்.... எழுத்தாளர் புகழ் கூறும் இந்த நூலை வாசித்துப் பயன் பெறுவதுடன் காத்தான்குடி எழுத்தாளர்கள் எனது தந்தையின் இம்முயற்சிக்கு காலம் காலமாக நன்றி யுடையவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.



இவ்வண்ணம்,
எம். எப். எம். ஸைனி
10 ஆம் ஆண்டு மாணவன்
றோயல் கல்லூரி,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org